| மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்<br>முதலாம் தவணைப் பரீட்சை – 2016<br>வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் |
|---|

| தரம்:- 10 | சுட்டெண் : | நேரம்:- 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி - I

❖ பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து புள்ளடித்தாளில் இடுக.

01) மனிதனின் தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவு செய்யும் கருமம்
(1) உற்பத்தி (2) வணிகம் (3) வியாபாரம் (4) நுகர்வு

02) மனித தேவையாக கருதப்படுவது
(1) வீடு (2) சவர்க்காரம்
(3) இலவச சீருடை (4) குழாய்நீர்

03) பின்வரும் கூற்றுக்களிடையில் தேவை மற்றும் விருப்பங்களுக்கிடையிலான வேறுபாட்டை காட்டும் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
(1) தேவைகள் வரையறை அற்றவை, விருப்பங்கள் வரையறுக்கப்பட்டவை
(2) தேவைகள் உருவாக்கப்படக்கூடியன, ஆனால் விருப்பங்கள் உருவாக்கக் கூடியவை அல்ல.
(3) தேவைகள் ஒவ்வொரு தனிநபருக்கும் பொதுவானது, ஆனால் விருப்பங்கள் வேறுபட்டவை.
(4) தேவைகள் மேலதிகமானவை, ஆனால் விருப்பங்கள் அடிப்படையானவை.

04) வணிகத்தின் பிரதான நோக்கமாகக் கருதப்படுபவை
(1) இலாப உழைப்பு, தொடர்ந்து நிலைத்திருத்தல்
(2) இலாப உழைப்பு, தொழில்வாய்ப்பு ஏற்படுத்தல்
(3) தொழில்வாய்ப்பு ஏற்படுத்தல், ஊழியர் நலன்பேணல்
(4) பொருள் சேவை தரமேம்பாடு, இலாப உழைப்பு

05) பின்வருவனவற்றுள் பொருள் உற்பத்தி வணிகம் எது?
(1) சில்லறை வியாபார வணிகம் (2) ரயர் உற்பத்தி
(3) வாகனம் திருத்துதல் (4) வைத்தியசாலை

06) உடல் உழைப்பினை வழங்குவோர் யாவர்?
(1) கணக்காளர் (2) முகாமையாளர்
(3) வைத்தியர் (4) சுரங்கத் தொழிலாளர்

07) உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்டவைகளும் உற்பத்தியின் போது துணையாக கொள்ளப்படுபவைகளும் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) முயற்சி (2) உழைப்பு (3) கட்டடம் (4) மூலதனம்

08) வணிக இடங்களைப் பொறுப்பேற்று, புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்தி, வணிகத் தீர்மானங்களை எடுப்பவர்
(1) முகாமையாளர் (2) தொழிலாளர்
(3) உரிமையாளர் (4) கணக்காளர்

09) வணிகமொன்றின் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக வணிகத்தின் வளங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான தீர்மானம் மேற்கொள்ளும் நபர்களை எவ்வாறு அழைப்பர்?
(1) உரிமையாளர் (2) ஊழியர்
(3) வாடிக்கையாளர் (4) முகாமையாளர்

10) வணிகத்தின் அகச்சூழல் காரணியாக அமைவது

(1) மக்கள் தொகை (2) பணவீக்க நிலை
(3) உரிமையாளர் (4) தொழில்நுட்பம்

11) பணவீக்கம் எனும் காரணி உள்ளடங்குவது

(1) பூகோளச் சூழலில்
(2) பொருளாதார சூழலில்
(3) மக்கள் சூழலில்
(4) விஞ்ஞான தொழில்நுட்ப சூழலில்

12) 2007ம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டம் உள்ளடங்கும் சூழல் காரணி

(1) அரசியல் சூழல் (2) சட்டச்சூழல்
(3) தொழில்நுட்பச் சூழல் (4) பொருளாதாரச் சூழல்

13) இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகளை தீர்மானிப்பதற்கு அரசுக்கு ஆலோசனை வழங்கும் வங்கி

(1) இலங்கை வங்கி (2) மத்திய வங்கி
(3) சேமிப்பு வங்கி (4) அபிவிருத்தி வங்கி

14) ஐக்கிய அமெரிக்க நாட்டின் நாணய அலகு

(1) டொலர் (2) ஸ்ரெலிங்பவுண்
(3) யூரோ (4) யென்

15) ஊழியர்களின் திறன்களை அதிகரிக்கச் செய்வதற்காக ஒரு வணிகத்தினால் நடாத்தப்பட்ட செயலமர்வு ஒன்று சகல ஊழியர்களினாலும் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்படின் அது அவ்வணிகத்துக்கு

(1) ஒரு பலம் ஆகும்.
(2) ஒரு வாய்ப்பு ஆகும்.
(3) ஒரு பலவீனம் ஆகும்.
(4) ஒரு அச்சுறுத்தல் ஆகும்.

16) வணிகம் ஒன்றின் பலத்தினையும், அச்சுறுத்தலையும் ஒழுங்குமுறையில் எடுத்துக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

(1) அரசு ஆதரவான சட்டங்களை இயற்றலும், பொருத்தமான வணிகத்திட்டம் இருத்தலும்
(2) சிறந்த ஊழியர் இருத்தலும், அரசு மானியம் வழங்கலும்
(3) இயந்திரங்கள் அடிக்கடி பழுதுபடலும், போட்டியாளர் சந்தையை விட்டு வெளியேறுதலும்
(4) வினைத்திறனுடைய இயந்திரங்கள் இருத்தலும், பலம் மிகுந்த போட்டியாளன் ஒருவனது வருகையும்

17) உரிமையின் அடிப்படையில் வணிகத்தினை வகைப்படுத்தல் ஆனது

(1) அரசதுறை, தனியார்துறை
(2) இலாப நோக்குள்ள வணிகம், இலாப நோக்கற்ற வணிகம்
(3) சிறிய நடுத்தர அளவிலான வணிகம், பேரளவு வணிகம்
(4) அரசதுறை வணிகம், இலாப நோக்கற்ற வணிகம்

18) பின்வருவனவற்றுள் பொதுத்துறை வணிக அமைப்பு எது?

(1) தனியார் கம்பனி (2) கூட்டுத்தாபனங்கள்
(3) கூட்டுறவு (4) பங்குடமைகள்

19) ஊழியர் தொகை 25 இற்கும் குறைந்த வணிகம் எவ்வாறு அழைக்கப்படும்?

(1) பாரிய அளவு வணிகங்கள்

(2) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

(3) சங்கங்கள், கழகங்கள்

(4) சிறிய நடுத்தர வணிகங்கள்

20) வணிக உரிமையாளர்கள் தமது முழுப் பெயரிலன்றி வேறு பெயரில் வணிகத்தை நடாத்தினால் வணிகத்தின் பெயரை பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும். அத்தகைய அமைப்பு எது?

(1) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

(2) கூட்டுத்தாபனங்கள்

(3) தனிஉடைமை வியாபாரம்

(4) கூட்டுறவு

21) "இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்" ஆனது ஒரு

(1) ஒரு தனிஉடைமை வணிக அமைப்பு

(2) பங்குடமை வணிக அமைப்பு

(3) அரச கூட்டுத்தாபன வணிக அமைப்பு

(4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

22) பின்வருவனவற்றுள் தனி உடமை வணிகத்தின் அனுகூலம் எது?

(1) வரையறுக்காத பொறுப்பு

(2) வரையறுத்த பொறுப்பு

(3) இலகுவாக உருவாக்க முடிதல்

(4) நீண்டகாலம் தொழில்படும் தன்மை

23) உலகத்தின் எல்லா நாடுகளிலும் பரவலாகக் காணப்படும் வணிக அமைப்பு பின்வருவனவற்றுள் எது?

(1) பங்குடமை

(2) தனியார் உரிமை வணிகம்

(3) கூட்டுறவு

(4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

24) பின்வரும் அட்டவணையில் X வணிக அமைப்புக்களையும் Y அவ் வணிகங்களுக்கான உதாரணங்களையும் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| (1) தனி வியாபாரம் | A - தனு (Pvt) லிமிட்டெட் |
| (2) பங்குடமை | B - சங்கானை ப.நோ.கூட்டுறவுச் சங்கம் |
| (3) கம்பனி | C - குமாரசாமி அன். சன்ஸ் |
| (4) கூட்டுறவு | D - இலங்கை வங்கி |
| (5) கூட்டுத்தாபனம் | E - சந்திரா ஸ்ரோர்ஸ் |

X மற்றும் Y தொடர்பிலான மிகப் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

(1) 1 - C / 2 - A / 3 - D / 4 - B / 5 - E

(2) 1 - E / 2 - C / 3 - A / 4 - B / 5 - D

(3) 1 - A / 2 - C / 3 - E / 4 - D / 5 - B

(4) 1 - B / 2 - E / 3 - C / 4 - A / 5 - D

25) பின்வருவனவற்றுள் சட்ட ஆளுமையை கொண்டுள்ள அமைப்பு
(1) தனிவியாபாரம், பங்குடமை
(2) வரையறுத்த பொதுக்கம்பனி, பங்குடமை
(3) வரையறுத்த பொதுக்கம்பனி
(4) பங்குடமை, கூட்டுத்தாபனம்

26) கூட்டுறவு அமைப்பு ஒன்றில் ஆகக் குறைந்த அங்கத்தவர் எண்ணிக்கை
(1) 10 பேர் (2) 20 பேர் (3) 2 – 20 பேர் (4) 50 பேர்

27) ரூபா 1000 அல்லது அதற்கு மேற்பட்ட ஆரம்ப மூலதனத்தைக் கொண்ட பங்குடமை வணிகத்தின் ஒப்பந்தம் எழுத்து மூலம் காணப்பட வேண்டும் என வலியுறுத்தும் சட்டம்
(1) 1840 ஆண்டு பங்குடமை சட்டம்
(2) 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிச் சட்டம்
(3) மோசடி தவிர்ப்புக் கட்டளைச் சட்டம்
(4) 1918ம் ஆண்டு 06ம் இலக்க வணிக பெயர் பதிவு கட்டளைச் சட்டம்

28) குணாளன் தனது வணிகத்தினை 1918ம் ஆண்டு 06ம் இலக்க வணிக பெயர் பதிவு கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளார். இதன் மூலம் அவர் பெறக்கூடிய பிரதி பயன்
(1) சகல இலாபங்களையும் தானே அனுபவித்தல்
(2) வணிகத்துக்கு அடையாளமொன்று கிடைத்தல்
(3) வருமான வரி விலக்குப் பெறுதல்
(4) திறந்த தீர்மானங்களை எடுக்க கூடியதாக இருத்தல்

29) பின்வருவனவற்றுள் இலாபநோக்கமற்ற தனியார்துறை வணிகம் எது?
(1) பங்குடமை (2) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
(3) கூட்டுறவு (4) கூட்டுத்தாபனம்

30) குடியிருப்புக்கள் நெருக்கமாக உள்ள இடத்தில் தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்றை நிறுவ முற்படின் நாம் உடனே முறையிட வேண்டிய இடம்
(1) கம்பனிப் பதிவாளர் திணைக்களம்
(2) தொழில் பிணக்குச் சபை
(3) பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
(4) இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபை

31) கணக்கேடுகளில் பதிவு செய்ய முடியாத தகவல் பின்வருவனவற்றுள் எது?
(1) உரிமை மூலதனம் ரூபா 50000
(2) வாடகை செலுத்தியது ரூபா 10000
(3) முற்பண காப்புறுதி ரூபா 1300
(4) நிறுவன ஊழியர் எண்ணிக்கை 60

32) வணிகமொன்றின் கொடுக்கல் வாங்கல், நிகழ்வுகளைக் குறிக்கும் விடயங்கள் முறையே
(1) ரூபா 10000 ற்குப் பொருள் விற்பனை, ரூபா 3000 அறவிடமுடியாக்கடன் பதிவளிப்பு
(2) மாத வாடகைக் கொடுப்பனவு ரூபா 5000, ரூபா 5000 மின்சாரக் கொடுப்பனவு
(3) ரூபா 3000 அறவிடமுடியாக்கடன் பதிவளிப்பு, ரூபா 10000 பொருள் தீயால் அழிவடைதல்
(4) சம்பளம் செலுத்துதல் ரூபா 3000, வாடகை வருமானம் பெறுதல் ரூபா 5000


kalvi.lk

33) பின்வருவனவற்றுள் எது நடைமுறைச் சொத்தாகும்?

(1) காணி (2) கட்டடங்கள்

(3) இயந்திரம் (4) வங்கிமீதி

34) பல்பொருள் விற்பனை வணிக நிறுவனமொன்றில் காணப்படும் நீண்ட காலம் பாவிக்கக்கூடிய உயர் பெறுமானம் கொண்ட வளமாகக் கருதக்கூடியது

(1) காசு (2) கடன்பட்டோர்

(3) தளபாடம் (4) வங்கிக்கடன்

35) வணிகக் கருமங்களின் போது 12 மாதங்களைக் கொண்ட குறுகிய காலத்தினுள் பயன்படுத்துவதற்கு அல்லது மீள விற்பனை செய்வதற்கு அல்லது பணமாக மாற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் வளங்களை எவ்வாறு அழைப்பர்?

(1) நடைமுறை அல்லாச் சொத்துக்கள்

(2) மூலதனம்

(3) நடைமுறைச் சொத்துக்கள்

(4) பொறுப்புக்கள்

❖ **36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு பின்வரும் தகவல்களை கருத்திற் கொண்டு விடையளிக்குக.**

A - கட்டடங்கள்
B - கடன்பட்டோர்
C - தளபாடம்
D - வங்கிக்கடன்
E - கடன்கொடுத்தோர்
F - நிலுவையான மின்சார செலவு
G - காசுமீதி
H - மின்சார செலவு
I - மூலதனம்

36) நடைமுறை அல்லாத சொத்துக்களைக் குறிக்கும் தொகுதி

(1) A, I (2) C, G (3) A, C (4) E, H

37) நடைமுறைச் சொத்துக்களைக் குறிக்கும் தொகுதி

(1) A, C (2) B, G (3) H, I (4) C, F

38) நடைமுறைப் பொறுப்புக்களைக் குறிக்கும் தொகுதி

(1) E, F (2) H, I (3) B, D (4) F, H

39) நடைமுறையல்லாத பொறுப்பைக் குறிக்கும் ஆங்கில எழுத்து

(1) E (2) I (3) F (4) D

40) உடைமையாளர் உரிமையைக் குறிக்கும் ஆங்கில எழுத்து

(1) D (2) F (3) I (4) A

(1 × 40 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

✶ **முதலாம் வினா உட்பட, பகுதி - I இலிருந்து இரண்டு வினாக்களையும், பகுதி - II இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

01) இந்திரன் நிறுவனம் ஆடைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிறுவனமாகும். இந் நிறுவனமானது சேட், சாரம், சேலை, காற்சட்டை, சல்வார் போன்றவற்றை நவீன முறையில் தயாரித்து விற்பனை செய்கின்றது. இந்நிறுவனமானது 50 மில்லியன் ரூபா ஆரம்ப மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டு இன்று 100 க்கு மேற்பட்ட தொழிலாளர்கள், பயிற்சி பெற்ற விசேட தொழிலாளர், மற்றும் வினைத்திறன் மிக்க நவீன இயந்திர சாதனங்களுடன் இயங்கி வருகின்றது. இந்த நிறுவனமானது அதிவேக வீதிகளைக் கொண்ட நகர்ப்புறத்தில் அமைந்துள்ளது. அத்துடன் ஆடை உற்பத்திக்கு அரசாங்கம் ஊக்குவிப்பு வரிச்சலுகையும் வழங்கி வருகிறது.

➢ **மேற்குறித்த சம்பவத்தைப் பயன்படுத்தி 1 - 5 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.**

(1) உடைமையின் அடிப்படையில் இந்த வணிகத்தை வகைப்படுத்துக.

(2) பருமனின் அடிப்படையில் வகைப்படுத்தினால் இந்த வணிகம் எந்த வகைக்குள் சேரும்?

(3) இந்த வணிகத்தில் காணப்படக்கூடிய 2 பலங்களைக் குறிப்பிடுக.

(4) இந்த வணிகத்துக்கான 2 வணிக வாய்ப்புக்களைக் குறிப்பிடுக.

(5) இந்த வணிகத்தால் நிறைவேற்றப்படும் மனித தேவையினையும், விருப்பங்களையும் குறிப்பிடுக.

(2 × 5 = 10 புள்ளிகள்)

**இந்த வணிகத்தில் 2015ம் ஆண்டில் பெறப்பட்ட தகவல்கள் வருமாறு**

ஆடைகள் மூலம் பெற்ற காசு ரூ 500 000

கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்ட ஆடைகள் ரூ 300 000

தையல் இயந்திரங்களின் பெறுமான தேய்வு ரூ 30 000

மின்சாரச் செலவு ரூ 40 000

இந்த வணிகத்தில் 50 ஊழியர்கள் பெண்களாவர்.

➢ **6 - 10 வரையான வினாக்களுக்கு மேற்காட்டிய சம்பவத்தைப் பயன்படுத்தி விடையளிக்குக.**

(6) இவ் வணிகத்தின் ஆரம்ப மூலதனம் யாது?

(7) இவ் வணிகத்தில் காணப்படும் நடைமுறை அல்லாத சொத்து, நடைமுறை சொத்து ஆகியவற்றுக்கு உதாரணம் ஒவ்வொன்று தருக.

(8) இங்கு இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(9) இங்கு இடம்பெற்றதாக கருதப்படும் 'நிகழ்வுகள்' என்பதற்கு உதாரணம் ஒன்றினைக் குறிப்பிடுக.

(10) இவ்வணிகத்தில் பணத்தால் அளவிட முடியாத விடயம் எது? (2 × 5 = 10 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - I (அ) வணிகக்கல்வி

02) i) வணிகத்தின் பிரதான நோக்கங்கள் 02 தருக.

ii) தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் 02 தருக.

iii) வணிகமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளின் தன்மைக்கமைய வணிகங்களை 02 வகையாகப் பிரிக்கமுடியும். அவை எவை?

iv) உற்பத்திக் காரணிகள் 04 தருக.

v) பாடசாலை ஒன்றில் அக்கறை செலுத்தும் தரப்பினர் 04 தருக. ($2 \times 5 = 10$ புள்ளிகள்)

03) "எந்தவொரு வணிகத்தை நோக்கினும் அதனுடன் தொடர்படைய சூழலொன்று காணப்படும்"

i) வணிகச் சூழல் என்பதனை வரையறுக்குக.

ii) அகச்சூழல் காரணிகள் 02 தருக.

iii) வணிகம் தொடர்பாக அரசினால் அமுல்படுத்தப்படும் சட்டவிதிகளை செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட பதவிகள் மற்றும் நிறுவனங்கள் 02 தருக.

iv) உள்நாட்டு வணிகத்தில் பூகோளமயச் சூழலினால் ஏற்படும் சாதகமான விளைவு 02 உம் பாதகமான விளைவு 02 உம் தருக.

v) வணிகமொன்றில் காணப்படும் அச்சுறுத்தல்களுக்கு 02 உதாரணங்கள் தருக.

($2 \times 5 = 10$ புள்ளிகள்)

04) சில வணிக நிறுவனங்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- ✶ வரையறுக்கப்பட்ட சாளினி கம்பனி
- ✶ ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்
- ✶ சுந்தரமும் சகோதரர்களும்
- ✶ கிராமிய நலன்புரிச் சங்கம்
- ✶ இலங்கைத் தபால் திணைக்களம்
- ✶ இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
- ✶ இலங்கை போக்குவரத்துச் சபை

i) மேற்காட்டிய ஒவ்வொரு நிறுவனத்திற்குரிய வணிக அமைப்பு வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

ii) அவ்வணிக நிறுவனங்களை உரிமையின் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக.

iii) வணிகங்களை நோக்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்தி மேற்காட்டிய வணிகங்களை அவ்வகைப்படுத்தலின் கீழ் வகைப்படுத்துக.

iv) மேற்காட்டிய வணிக நிறுவனங்களின் சட்ட ரீதியான தனிமனித அந்தஸ்துடன் கூடிய வணிக நிறுவனங்கள் எவையெனக் கூறுக. ($2\frac{1}{2} \times 4 = 10$ புள்ளிகள்)

## பகுதி - II (ஆ) கணக்கீடு

05) i) கணக்கீட்டின் நோக்கம் யாது?

ii) சொத்துக்களை வகைப்படுத்துக.

iii) பொறுப்புக்களை வகைப்படுத்துக

iv) சொத்துக்களின் இரண்டு பண்புகளைக் குறிப்பிடுக.

v) இலாபம் என்றால் என்ன? ($2 \times 5 = 10$ புள்ளிகள்)

06) பின்வரும் அட்டவணையில் பொருத்தமானவற்றுக்கு (✓) அடையாளம் இடுவதன் மூலம் பூர்த்தி செய்க.

| | கொடுக்கல் வாங்கல் | நடைமுறை அல்லாத சொத்து | நடைமுறை சொத்து | நடைமுறை அல்லாத பொறுப்பு | நடைமுறை பொறுப்பு | உரிமை |
|---|---|---|---|---|---|---|
| (1) | மூலதனம் | | | | | |
| (2) | கட்டிடம் | | | | | |
| (3) | தளபாடம் | | | | | |
| (4) | சரக்கிருப்பு | | | | | |
| (5) | கடன்படுநர் | | | | | |
| (6) | வங்கிமீதி | | | | | |
| (7) | வங்கி மேலதிகப்பற்று | | | | | |
| (8) | கடன்கொடுநர் | | | | | |
| (9) | வங்கிக்கடன் | | | | | |
| (10) | செலுத்திய காப்புறுதி முற்பணம் | | | | | |

(10 × 1 = 10 புள்ளிகள்)

07) கீழே தரப்பட்டவற்றை சொத்துக்கள், பொறுப்புகள், உரிமைகள், செலவீனங்கள், வருமானங்கள் என வகைப்படுத்துக.

வங்கிக்கடன்
வங்கிக்கடன் வட்டி
மூலதனம்
கடன்படுநர்
கடன்கொடுநர்
விற்பனைகள்
பெற்ற வாடகை
கொடுத்த வாடகை
முதலீடு
மோட்டார் வான்

| சொத்துக்கள் | பொறுப்புகள் | உரிமைகள் | செலவீனங்கள் | வருமானங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

(10 × 1 = 10 புள்ளிகள்)

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page